# சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுக்கிறார்!

# போர் முரசு கொட்டுகிறார்!!

## மதத்தைப் பாதுகாக்க மார்தட்டுகிறார்!


# திராவிடநாடு

மலர் 11 | 24—5—53 | இதழ் 47

விலை 2 அணா


### சரித்திரம் தவறானதாம்!
### சாற்றுகிறார் ஆச்சாரியார்!

[ அடிகள் ]

★

எச்சரிக்கை! எச்சரிக்கை!!

எதிர்ப்பு எதிர்நோக்கி வந்து கொண்டே இருக்கிறது!

இப்பவோ, எப்பவோ என்று சொல்வதற்கில்லை!

வானத்திலே கரிய மேகம் சூழ்ந்துவிட்டால், மழையை எப்படி எதிர்பார்த்துக் கொண்டிருப்போமோ, அப்படியே இந்த எதிர்ப்பும், எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய ஒன்றாகிவிட்டது!

தாக்குதல் எப்பொழுது தொடங்கும் என்று சொல்லுவதற்கில்லை!

என்றாலும், அதற்குரிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டுவிட்டன!

எதிர்ப்பை எதிர்த்து முறியடிக்கவேண்டும்!

இல்லையேல், என்னை நீங்கள் காணமாட்டீர்கள் — உங்களை நான் பார்க்கமுடியாது!

இந்த எதிர்ப்பு அந்த அளவுக்கு வலுவுள்ளதாக இருக்கும் என்ற அச்சம் என்னைப் பெரிதும் வாட்டுகிறது—வதைக்கிறது—என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை—புரியவில்லை!

ஏதோ கையாலாகாதவர்களின் காட்டுக்கூச்சல் என்றுதான் இவ்வளவு காலமும் எண்ணிக்கொண்டிருந்தேன்!

இப்ப அல்லவா தெரிகிறது, எம்மை எதிர்நோக்கிவரும் எதிர்ப்பு இலேசானதல்லவென்பது!

எனவேதான், எச்சரிக்கை செய்கிறேன்!

தாக்குதலைத் தாக்கத் தயாராய் இருக்கவேண்டுமென்று உங்களைப் பெரிதும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்!

நம்மளவாளின் எதிர்காலம் உங்கள் எதிர்ப்பையே பொறுத்திருக்கிறது!

எம்மையெல்லாம் உய்விக்க எம்மனோரால் கண்டுபிடிக்கப்பட்ட மதம் தாக்கப்படப்போகிறது—அதாவது மதம் ஒழியப்போகிறது! அழியப்போகிறது!

மதம் ஒழிந்தால் — ஒழிக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருந்தால், மனுவின் கோபத்துக்கும் சாபத்திற்கும் ஆளாகி விடுவோமே!

மனுவாதி நமது ஆன்றோர்கள் நமக்காக ஆக்கித்தந்த மதத்தை நாம் அழியவிடுவதா?

அது அழிவதை நானும் நீங்களும் பார்த்துக்கொண்டிருப்பதா?

மந்திரியாகிய யான் மந்திரமோதிகளாகிய உங்களை அழைக்கிறேன், மதத்தைக் காப்பாற்ற வாருங்கள் என்று!

மதம் நமது மகத்தான அரண்!

அதை உடைத்தெறிய நம்முடைய எதிரிகள் முனைந்துவிட்டார்கள்!

மதமெனும் மதிற்சுவர்தானே நமது சுகவாழ்வின் பாதுகாப்பாக அமைந்துள்ளது!

அது அழிந்துவிட்டால், நாம் ஒழிந்துவிட்டதாகத்தானே பொருள்!

எனவேதான் மதத்தைக் காப்பாற்ற முன்வாருங்கள்! முன்வாருங்கள் என்று முன்னெச்சரிக்கையாக அழைக்கிறேன்!

முதல் அமைச்சர் என்ற முறையில் அழைக்கிறேன்!

உங்கள் சதை துடிக்கவில்லையா?

குருதி கொதிக்கவில்லையா?

நரம்புகள் முறுக்கேறவில்லையா?

உடல் உரம் அற்றுவிட்டீர்களா?

போர்வோம் புறப்படுங்கள் போர் முனைக்கு!

என் வாழ்நாளில் எம்மனோரின் இரட்சகராகிய மதமெனும் பெரும் பொருளை அழியவிடமாட்டேன்—ஒருபோதும் அழியவிடமாட்டேன்!

சிலர் கூறுகிறார்கள், நாட்டின் பொதுநலத்தில், அதாவது நாட்டு மக்கள் அனைவருடையவும் நல்வாழ்வில் நான் அக்கறை கொண்டவன் என்பதாக!

அது வடிகட்டின பொய்!

என்னுடைய குறிக்கோள் அதுவல்ல!

நம்மளவாளின் முன்னேற்றம் ஒன்றே எனது வாழ்க்கையின் இலட்சியம்!

இதனை அறிந்துகொள்ளமுடியாத சிலர் என்னைப்பற்றித்தவறான கருத்துக்களை வெளியிட்டு விடுகிறார்கள்!

அது எவ்வளவு அறியாமை நிரம்பியது என்பது. நான் எங்குசென்று எதைப்பற்றிப் பேசினாலும், அங்கு நான் உயிர்நாடியாக வைத்துப்பேசுவது "நமது மதம்" நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டு, அதன்வாயிலாக நம்மளவாள் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதையேயொழிய வேறொன்றுமல்லவென்பது என்னுடைய ஒவ்வொரு பிரசங்கங்களிலிருந்தும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

நான் இன்னும் இதைப்பற்றிச் சுற்றி வளைத்துப் பேசி இதனை ஏன் வளர்த்துக்கொண்டு போகவேண்டும்? சுருக்கமாகச் சொல்லிவிட்டுமா?

நான் சாதாரண இராஜகோபாலாச்சாரியாய் இருந்தால் என்னுடைய பேச்சை எவரும்கேட்கமாட்டார்களாதலால், என்னுடைய குறிக்கோள் நிறைவேறுதென்பதை உணர்ந்து நான் எப்படியாவது அரசியலில் நுழைந்துவிடலாம் என்று கருதினேன். காலப்போக்கு என்னை நேரான வழியில் அரசியலில் நுழையவிடவில்லை. பிறகு எப்படியோ நம்மளவாள் செய்த "தவப்பயனாக" நான் அரசியலில் நுழையும் வாய்ப்புக் கிடைத்தது. மட்டற்ற மகிழ்ச்சியுடன் எனது கடமையை அல்ல, அல்ல; எனது குறிக்கோளை, அதாவது நம்மனோரின் முன்னேற்றத்துக்கு வேண்டிய அடிப்படைக் காரியத்தைத் தொடர்ந்து செய்து வருகிறேன். நான் ஒரு அமைச்சர் என்பதால் நான் சொல்வதை எல்லாம் மக்கள் நம்பும் நிலை ஏற்பட்டிருக்கிறதல்லவா? அமைச்சர் என்னும் அடிப்படையை (Foundation) வைத்துக்கொண்டுதான் மதமென்னும் மதிற்சுவர் பழுதடையாதவாறு பார்த்துக்கொள்கிறேன்!

இதுதான் சூட்சமம்!

நான் பதவியிலிருக்கும்போதே மதத் தாக்குதல் நடக்கப்பார்க்கிறது!

இதனைப் பார்த்துக்கொண்டு நான் வறிதே கிடக்கமாட்டேன்!

எனவே மதத்தைக் காப்பாற்ற என்னுடன் ஒத்துழையுங்கள்!

இத்தருணம் தப்பினால் மறுதருணம் வாய்ப்பதரிது!

நான் பதவியிலிருக்கும்போதே என்னால் இயன்றதைச் செய்துவிடவேண்டும்!

அதற்கு உங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மிக மிகத் தேவை! அவசரமாகத் தேவை!!

இவையும், இவைபோன்ற இன்னும் பல கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்ட சொற்பொழிவுகளையே அன்பர் ஆச்சாரியார் இப்போது எங்கு சென்றாலும் நிகழ்த்தி வருகிறார்.

அண்மையில் (5—5—53) சென்னையில் மியூசியம் தியேட்டரில் பேசியபோது, இந்த மதத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தைப்பற்றியும், ஆரிய திராவிடப் பூசலைப்பற்றியும் நன்றாக 'அலசிப்' பேசியிருக்கிறார். பொதுமக்களின் விளக்கத்திற்காக அவர் பேசியவற்றின் கருத்துக்களை இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

ஆரிய-திராவிடப் பூசல்! அதாவது ஆரியர்கள் வேறு, திராவிடர்கள் வேறு! எல்லாத் துறைகளிலும் இவ்விரு இனத்தாருக்கும் வேறுபாடு உண்டு. இரு இனங்களும் ஒன்றாக இணைக்க முடியாது ஒன்றாக இணைக்கக்கூடிய விதத்தில் இவ்விரு இனங்களின் கலாச்சாரப் பண்பாடுகள் அமையவில்லை. என்ற போதிலும் காலமாறுதலுக்கேற்ப மக்களும் மாறித்தான் ஆகவேண்டுமென்ற பரந்த மனப்பான்மையோடு மாற நாம் (திராவிடர்கள்) முயன்றாலும், அதற்கு அவர்கள் (ஆரியர்கள்) ஒத்துவரமாட்டார்கள் போல் தெரிகிறது. அவர்களுடைய நடவடிக்கைகளை ஊன்றி நோக்கும்போது, அவர்கள், எவருடைய கலப்பையும் கண்ணியமான முறையில் விரும்பாமல், தனித்தே வாழ விரும்புவது போல காட்டிக்கொண்டு வருவாயும் செல்வாக்கும் வரும் துறைகளில் மட்டும் சாகாபாய் சுயபாராயணர்களாகி விடுகின்றனர். இதுவும் அவர்களுடைய கலாச்சாரப் பண்பாடுகளில் ஒன்று போலும்! இந்த விதமான ஆரிய—திராவிடக் கலப்பு விரும்பத் தக்கதல்ல. கொள்கையை அடிப்படையாகக்கொண்டு ஏற்படும் கலப்பையே நாம் விரும்புகிறோம். காந்தியாருக்கும் ஆச்சாரியாருக்கும் ஏற்பட்ட கலப்பு ஆரியதிராவிடக் கலப்பல்ல. பிராமண—வைசியக் கலப்பு. அதாவது ஆரியப்பிராமணர் ஒருவர் ஆரிய வைசியர் ஒருவரோடு சம்பந்தம் செய்து கொண்டார் என்பதுதான் அதன்பொருள். நாம் விரும்புவது இப்படிப்பட்ட கலப்புக்களை அல்ல. கொள்கையை அடிப்படையாக வைத்து, மக்கள் அனைவரும் ஒன்று என்ற முறையில் அதாவது "ஒன்றே குலம்" என்ற முதுமொழிப்படி, கலந்து வாழ விரும்புகிறோம். சேரியும் அக்ரகாரமும் ஒன்றாக வேண்டுமென்று கூறுகிறோம். அக்ரகாரத்தில் இருக்கும் ஆராவமுதய்யங்கார், சேரியில் இருக்கும் கருப்பாயியைக்கடிமணம் செய்து கொண்டு உடனே ஆராவமுதனுக்குப் பக்கத்திலுள்ள அய்யங்கார் என்ற வாலையும், மார்பில் மாட்டப்பட்டிருக்கும் நூலையும் அறுத்து, "நான் பார்ப்பான் — நீ பறையன்" என்ற வேறுபாடில்லாமல் கலந்து வாழ்வதை நாம் ஒருபோதும் எதிர்த்ததும் இல்லை — தடுத்ததுமில்லை.

அங்கே பட்டு! இங்கே பருத்தி! அங்கே பளபளப்பு! இங்கே பதை பதைப்பு! அங்கே மாளிகை! இங்கே குடிசை! அங்கே கல்வி! இங்கே கதறல்! அங்கே தங்கக்குடமும் வெள்ளித் தட்டும்! இங்கே மண்குடமும் மரத்தட்டும்! அங்கே ஊஞ்சல்! இங்கே ஊசல்! அங்கே சோறு! இங்கே கஞ்சி, அங்கே எல்லாம் இருப்பதால் வசதி! இங்கே ஒன்றுமில்லாததால் வம்பு! என்ற இன்னபிற வேற்றுமைகள் எல்லாம் ஒழிந்து, நான் உயர்ந்தவன்—நீ தாழ்ந்தவன் என்ற வீம்பு மாறி, எல்லோரும் ஒன்றெனும் நிலை ஏற்பட்டு ஒற்றுமையாக வாழ்வதைத் தான் நாம் விரும்புகிறோம். ஆரிய திராவிடப் பூசலை அன்பர் ஆச்சாரியார் கருதுகிறபடி நாம் வளர்க்க விரும்பவில்லை.

ஆச்சாரியார் கூறுகிறார், ஆரியதிராவிடப் பூசலுக்குத், தவறான சரித்திரம் எழுதிவைத்தது தான் காரணம் என்று.

(6-ம் பக்கம் பார்க்க)

---

# தி. மு. க. பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

—✱—

**அன்புடையீர்!**

வணக்கம். பொதுக்குழு உறுப்பினர்களின் 2-வது கூட்டம் 31—5—53 ஞாயிறன்று காலை 10-மணிக்கு, வடஆற்காடு மாவட்டம் அரக்கோணம் டவுன் ஹாலில் நடைபெறும். தாங்கள் தவறாது வருகைதர வேண்டுகிறேன்.

அன்பன்,

**அண்ணாதுரை,**

பொதுச் செயலாளர்.

திராவிடநாடு

காஞ்சி] 24—5—53 [ஞாயிறு

# நல்ல ஏற்பாடுதான்!

★

தேசத் தலைவர்களின் பெயர்களை வைத்துக்கொண்டு இனிமேல் எவரும் வியாபாரம் நடத்துவது விரும்பத்தக்கதல்ல — அந்த முறையைக் கைவிட்டுவிட வேண்டுமென்று கரூர் நகரசபைத் தலைவருக்குச் சர்க்கார் ஒரு அறிக்கை அனுப்பி இருப்பதாக அறிகிறோம். கரூர் மட்டுமென்ன! எல்லா நகரசபைத் தலைவர்களுக்கும் இந்த அறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறோம்.

ஒருவருக்கு, நாட்டில் மரியாதையும் செல்வாக்கும் ஏற்பட்டுவிட்டால் போதும், உடனே வியாபாரிகள், அவருடைய பெயரைப் பயன்படுத்திக்கொண்டு வியாபாரம் நடத்தி நல்ல வருவாய் தேட முற்பட்டு வருகிறார்கள். இதற்கு வழிகாட்டிகளாய் இருந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான், என்பதை எவரும் மறுக்கமுடியாது.

காந்தி பெயரால் ஒரு பெருங்காய உற்பத்திச் சாலை! நேரு பெயரால் ஒரு சிற்றுண்டிச்சாலை! போஸ் பெயரால் ஒரு மிலிட்டெரி ஓட்டல்! பட்டேல் பெயரால் ஒரு வாசனைப் புகையிலை உற்பத்திச்சாலை! இப்படிப் பெயர்களை வைத்துக்கொண்டு தங்கள் வியாபாரங்களை நடத்தி அதன் மூலம் பெரும் வருவாய் தேடிக்கொள்பவர்கள் எல்லாருமே காங்கிரஸ்காரர்கள்தான்.

இதுதான் அவர்கள் தங்கள் தலைவர்களுக்குச் செய்யும் மரியாதை!

இப்பொழுதுதான் விஷயம் சர்க்காருக்குத் தெரிந்திருக்கிறது; உடனே அறிக்கை அனுப்பத் தொடங்கி இருக்கிறது. நாட்டுத் தலைவர்களுக்கு நீங்கள் செய்யும் மரியாதையை உணர்ந்தோம், இனி இம்மாதிரி மரியாதையை நாங்கள் விரும்பவில்லை — எனவே இந்த முறையைக் கைவிடுங்கள் என்று வியாபாரிகளைச் சர்க்கார் கலெக்டர் மூலம் கேட்டிருக்கிறது. கலெக்டர் பட்டியல் தயாரித்து அனுப்பியதும் நாட்டுத் தலைவர்களின் பெயர்களோடு நடைபெறும் எல்லா வியாபார நிலையங்களும் பெயர் மாற்றப்படும் என்று நம்புகிறோம். இந்த ஏற்பாட்டை நாம் பெரிதும் வரவேற்கிறோம்.

இதுபோலவே சிலர் ஜாதியை வைத்துக் தங்கள் பிழைப்பை நடத்துகிறார்கள்—ஜாதியின் பெயரால் நல்ல வருவாயையும் அடைகிறார்கள். முதலில், தாங்களே மற்ற ஜாதிகளைப் பார்க்கிலும் உயர்ந்தவர்கள் என்று மக்கள் நம்பும்படி செய்தவர்கள், அந்த நம்பிக்கையின் நிழலில் நின்றுகொண்டு, தங்கள் வருவாய்க்கு வழி தேடிக்கொள்கிறார்கள். இது மிகவும் அருவருக்கத்தக்க ஒன்றாகும். ஜாதியின் உயர்வைக் காட்டிச் சம்பாதிப்பது என்பது விரும்பத்தக்கதா? நல்லமுறைதானா? என்பதையும் சர்க்கார் பரிசீலித்துப் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

ஆனால், 'நம்ம சர்க்கார்' இருக்கிறதே, அது ஒரு அலாதியான முறையைக் கொண்டது. ஏதாவதொன்று நல்லதென்று தோன்றினால், அதனைச் செய்து முடிக்கச் சர்க்காருக்குப் பலகாலம் பிடிக்கிறது. ஒன்று நல்லதென்று மக்கள் விரும்பினால், அதனை 'நமது' சர்க்கார் செய்யத் தயங்குகிறது. சர்க்காருக்கே அது நல்லதென்று தெரிந்தாலொழிய, அந்தக் காரியத்தைச் செய்யும் சுபாவம் மற்ற நாட்டுச் சர்க்காருக்கு ஏற்படுவதுபோல் 'நமது' சர்க்காருக்கும் ஏற்பட வேண்டுமென்பதே நமது விருப்பமாகும்.

வியாபாரத்துக்கு நாட்டுத் தலைவர்களின் பெயர்களைப் பயன் படுத்தக்கூடாது என்று அறிக்கை விடுத்ததைப்போலவே, வியாபாரத்துக்கு ஜாதிப் பெயரைப் பயன்படுத்தக் கூடாதென்பதையும் சர்க்கார் உணர்ந்து, ஒரு அறிக்கை விடுத்தால் நாட்டிலுள்ள ஜாதி வேறுபாடுகளும் அவற்றால் ஏற்படும் தேவையற்ற சச்சரவுகளும் ஒழிவதற்கு ஏதுவாகும். இதனைச் செய்ய முன் வருமா சர்க்கார்!

★

5-ம் பக்கத் தொடர்ச்சி

களையும், இவற்றின் கூறுகளை விளக்கும் விதிகளையும் முதன் முதலில் 1900-ம் ஆண்டிற்கும், 1911-ம் ஆண்டிற்கும் இடையே லான்ட்ஸ் டெய்னர் என்பவர் ஆராய்ந்தார். முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு இரத்தப் பிரிவுகள் இன்று உலகமெங்கும் பிரசித்தியும் முக்கியத்துவமும் பெற்றிருக்கின்றன. இரத்தங்களை பிறர் மீது ஏற்றும்போது இந்தப் பிரிவுகளை நிர்ணயஞ் செய்துகொள்ளப்படுகின்றது. முதல் பிரிவை "ஏ" பிரிவு என்று அழைக்கப்படுகின்றது. இரண்டாவது பிரிவை "பி" பிரிவு என்று அழைக்கப்படுகின்றது. மூன்றாவது பிரிவில் ஏ, பி, ஆகிய பிரிவுகள் உள்ளன. நான்காவது பிரிவில் இந்த அம்சங்களெதுவுமில்லை. இதை "ஓ" பிரிவு என்று அழைக்கப்படுகிறது.

'ஏ' பிரிவிலுள்ளோர் ஏ; ஏ. பி; ஓ ஆகிய பிரிவுகளிடமிருந்து இரத்தம் பெறலாம். ஆனால் 'பி' பிரிவிலிருந்து இரத்தம் பெற முடியாது. 'பி' பிரிவிலுள்ளோர் 'ஏ' பிரிவு நீங்கலாக இதர பிரிவுகளிலிருந்து இரத்தம் பெறலாம். 'ஏ. பி.' பிரிவிலுள்ளோர் இதர 4-பிரிவுகள் எதனிடமிருந்தும் இரத்தம் பெறலாம். 'ஓ' பிரிவிலுள்ளோர் இதரர்கள் எல்லோருக்கும் இரத்தம் கொடுக்கலாமென்றாலும், தங்கள் 'ஓ' பிரிவைச் சேர்ந்தவர்களிலிருந்து மட்டுமே பெறலாம். இந்த முறைகளைப் பின்பற்றாமல் மாறான பிரிவு இரத்தம் ஏற்றப்பட்டால் இரத்தம் கட்டிப்பட்டுவிடும். அதனால் அபாயமும் உயிருக்குத் தீங்கும் ஏற்படக் கூடும்.

எம். என். பி. எஸ். என்ற முக்கியமல்லாத பிரிவுகளும் பிறகு கண்டுபிடிக்கப்பட்டன. 1937-ல் லான்ட்ஸ் டெய்னரும், வைனரும் ரேஸஸ் அல்லது 'ஆர். எச்.' பிரிவை கண்டுபிடித்தனர். இதை மேலும் ஆராய்ச்சி செய்ததில் -சி. டி. இ. ஆகிய பிரிவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. லெவீன் என்பவர் புதிதாக பிறக்கும் குழந்தைகளில் எரித்ரோ பிளாஸ்டோஸிஸ்' Erythroblastosis) என்ற இரத்தப் பிரிவு இருக்கிறதென்றும், பெற்றோர்களில் ஒருவரிடம் 'ஆர். எச்.' அம்சமும் மற்றொருவரிடம் இது இல்லாமலும் இருப்பதால் இந்தப் பிரிவு ஏற்படுகிறதென்றும் கண்டு பிடித்தார். 1946-ம் ஆண்டிலிருந்து 1951-ம் ஆண்டு வரை லூதரான், கெல், லியூவிஸ் டஃபி, கிட் ஆகியோர் இன்னும் சில பிரிவுகளைக் கண்டுபிடித்தனர். இவற்றிற்கு இவர்கள் பெயர்களின் அடிப்படையை வைத்து 'எல். யு'; 'கே' 'எப். ஒய்'; 'ஜே' என்ற பிரிவுகளாகச் செய்யப்பட்டன.

இரத்தப் பிரிவுகளின் கூறுகள் பற்றிய கேள்விகளுக்கு மேற்கண்ட விவரங்கள் பதிலளிக்கின்றன. இரத்தம் ஏற்றும் முக்கியத்துவம் ஒரு பக்கம் இருக்க, இந்தப் பரிசீலனை பல சிக்கல்கள் நிரம்பியதாக இருக்கின்றன. போலீஸ் நடப்புகளும், வைத்திய சாட்சியங்களும், இரத்தக் கறைகளைக் கொண்டு குற்றங்களை கண்டு பிடிப்பதும், தகப்பனார் யார் என்பதை நிர்ணயிப்பதும் பௌதிக முறையில் ஆராய்ச்சி செய்வதும், பூர்வராசிகளை நிர்ணயிப்பதும், இரசாயன ஆராய்ச்சி செய்வதும், பாரம்பரை ஆராய்ச்சி செய்வதும் இரத்தப் பிரிவுகளைக் கொண்டு நடைபெறுகின்றன. மேலே கூறப்பட்ட பிரிவுகள் 13, 27, 10, 400 அம்சங்களைக் கொண்டிருக்கின்றன.

### காஸ்மிக் தூசி

இனநோக்கு சித்தாந்தப்படி பிரபஞ்சத்தில் எல்லையுள்ள வஸ்து இருக்கிறது ஆனால் பலர்கருதுவது போல எல்லையற்ற வஸ்து இல்லை. பிரபஞ்சத்தின் மொத்த திரட்சி 2-க்கு 10-55 கிராம்களாக இருக்கின்றன. இதைப் பெருக்கினால் பெருந்தொகை ஏற்படும். இதை சுலபமாக பெருக்கி விடவும் முடியாது. 1-க்குப் பிறகு 55 பூஜ்யங்கள் (0) இருப்பதைத்தான் 10-55 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த திரட்சி அல்லது குவியல் இரண்டு சரிபாகங்களாக பிரிந்திருக்கின்றனவென்று வான சாஸ்திரிகள் கூறுகின்றனர். எனவே சகல நட்சத்திரங்களிலும், வான மண்டலத்திலுள்ள இதர கோளங்கள், வஸ்துக்கள் ஆகியவற்றிலும் 10-55 கிராம் திரட்சியுள்ள வஸ்துக்கள் இருக்கின்றன. இந்த அளவுதான் நட்சத்திரங்களுக்கிடையே காஸ்மிக் தூசிகளாக இருக்கின்றன. இது வெண்மேக வஸ்துவாகவும் இருக்கின்றது.

### செயற்கை மழை

1946ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் தேதி லாங்மியூரும், ஷேபரும் கட்டியான கரியமில சாரத்தை [உலர்ந்த பனிக்கட்டி] மேகத்தில் தூவி செயற்கை மழையை முதன் முதலில் உண்டாக்கினர். இதற்கு அடுத்த ஆண்டு வெள்ளி—அயோடைட் அஞ்சனத்தின் உதவியோடு இதைச் செய்ததில் நீண்டகாலமாக கனவு கண்டுவந்த மனிதர்களால் உற்பத்தி செய்யப்படும் மழை பெய்யும்படி செய்யப்பட்டது. ஆய்வுக்களத்திலிருந்து கிடைத்த உண்மைகள் செயற்கை மழை உற்பத்தி செய்வதற்கு அனுகூலமாகியது. ஆனால் ஒரே சீரான பலன்கள் கிடைக்கக்கூடிய அளவுவரை இன்னும் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

### சீதோஷ்ண அளவு

பூஜ்யத்திற்கு குறைந்த 273.15 டிகிரி சென்டி கிரேட்டில் [இதில் 459.6 டிகிரி பாரன்ஹைட்டை கழிக்க வேண்டும்] சில வகைகளில உயிர் வாழும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 1950ம் ஆண்டில் பால் பெக்குயரெல் இருபபுச் சத்துடைய படிகார பவுடரில சிறிய மிருக பாசிகள் இரண்டை அமிழ்த்தி வைத்திருந்தார். இருமுறை இவற்றிற்கு 0 05 டிகிரிக்கு குறைவாக உஷ்ணமிருந்தது. இது இரண்டு மணிநேரம் கழித்து இவை சாதாரண சீதோஷ்ண நிலைக்கு கொண்டு வரப்பட்டபோதும் வழக்கமான வாழ்க்கை நிலையுடனே இருந்தது.

### பெரிய தாவர ராசி

நீரியோஸிஸ்டிஸ் (Nereocystis) என்ற கடற் பூண்டுதான் இது. 1926ம் ஆண்டில கண்டுபிடிக்கப்பட்ட இதன் நீளம் 305 மீட்டர்களாகும் [990 அடி]

### இரசாயன வஸ்துக்கள்

தற்கால நவீன இரசாயன சாஸ்திரத்தில நூற்றுக்கணக்கான இரசாயன வஸ்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கிருஸ்து வ சகாப்தத்திற்கு முன்னர் செம்பு, ஈயம், (டின்) தங்கம், வெள்ளி, வெள்ளீயம், கந்தகம், பாதரசம், கரியமிலம் ஆகிய ஒன்பது வஸ்துக்கள் தான் கண்டுபிடிக்கப்பட்டதால் தொழில் நுட்ப, சமூகவிளைவுகள் பல ஏற்பட்டன. செம்பை உருக்க மனிதர்கள் தெரிந்த பின்னரே முதல் முதலில் அவர்கள் உபயோகமுள்ள உலோக வஸ்துக்களைச் செய்ய முடிந்தது. இரும்பு முக்கயத்துவம் பெற்றிருந்ததால்தான் ஒரு காலத்திற்கே இரும்பு சகாப்தம் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருந்தது.

[தமிழ் முரசு]

★

## சித்தன் படப்பிடிப்பு

"திருச்சியிலிருந்து இரவோடு இரவாக சிவகங்கைக்கு வந்த டி. டி. கே. என்னத்தைப் பார்த்திருப்பாரென்று கல்கி மெள்ளக் கிண்டல் செய்கிறது. உண்மை தான், அவர் என்னத்தைப் பார்த்திருப்பார்? கனம் ராஜாஜி குற்றாலத்துக்குப் போனதன் மூலம் திருநெல்வேலி ஜில்லாவையே பார்த்தது போலவும், தஞ்சை பொம்மைக் காட்சிக்குப் போனதன் மூலம் தஞ்சை ஜில்லாவையே பார்த்தது மாதிரியாகவும், மதுரை நகருக்கு சென்றதன் மூலம் மதுரை மாவட்டத்தையே அறிந்தது போன்றும் கனம் டி. டி. கே. பார்க்கவோ அறியவோ முடியாதுதான்."

*

"மத ஆசாரியார்களான சங்கரரும் ராமானுஜரும் யாரைக் கேட்டுக் கொண்டு சீர்திருத்தங்கள் செய்தார்கள்? ஆகவே, கல்வி சீர்திருத்தத்துக்கு நாம் யாரையும் கேட்க அவசியமில்லை"யென கனம் ராஜாஜி சென்னை சங்கீதக் கச்சேரி ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார். இக்கருத்தை ஏற்க சித்தன் தயாராகவே இருக்கிறான். ஆனால் இதில் ஒரு துரதிர்ஷடம் இருக்கிறது. அதாவது அந்த மதாசாரியார்கள் காலத்தில் இந்த மாதிரி சர்க்காரோ முதன் மந்திரிப் பதவியோ இல்லை! வீதியிலே படுத்திருக்கிற பண்டாரம் அவன் இஷ்டப்படி நடக்கலாம், பாடலாம், பேசலாம், பட்டினி கிடக்கலாம் என்று உள்ளது. ஆனால் இதே வேலையை இன்றுள்ள மந்திரிகளோ, முதன்மந்திரிகளோ, மாஜி கவர்னர் ஜெனரல்களோ செய்ய முடியுமா? இதல்லாமல் இன்னொரு பிரச்னையும் இதில் இருப்பதை கனம் ராஜாஜி சிந்திக்கவில்லையென்றே சித்தன் கருதுகிறான். அதாவது சங்கரரும் ராமானுஜரும் தங்களது கோட்பாடுகளை நிறைவேற்றி வைக்க டேலீஸ் ராணுவ, அவசரச் சட்டங்களை விடவில்லை. ஏன், விளம்பரத்துக்காக ஒரு பத்திரிகையைக் கூட நாடவில்லை. அதே மாதிரியாகவா, இப்போதுள்ள ஆரம்பக் கல்வி சீர்திருத்தம் வந்திருக்கிறது?

ராஜாஜியாக ஒரு திட்டத்தை யோசித்தார். உடனே அது அடுத்த ஆண்டில் பள்ளிக்கூடங்களில் அமுலுக்கு வருமென உத்தரவு போட்டுவிட்டார். இதில சம்பந்தப்பட்டிருக்கும் பிள்ளைகளின் தொகை பலலாயிரம். எனவே, பல்லாயிரம் பிள்ளைகளின் தலை விதியை நிர்ணயிக்ககூடிய ஒரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் முன்னர் கல்வி நிபுணர்களிடம் கலந்து பேசியிருக்கவேண்டும். அப்படிச் செய்யவில்லை. "நான் செய்வதெல்லாம் சரியாகத்தானிருக்கும்—இல்லையா கல்கி?" என்று கேட்டுக்கொண்டு போவது எப்படி நியாயமாகும்?"

"இமயம்"

துள்ளி எழுந்தார்! வெளியே நடந்தார்! அபுல்கலாம் ஆசாத், ஓட்டமாக ஓடி சட்டையை இழுத்தார்!

"தடுக்காதீர்—போகிறேன்" என்று கூறிய வண்ணம், வேகமாக வெளியேறினார்!!

*

"பூனை, தப்பித்துவிட்டது!" — என்றார் பாலகிருஷ்ண சர்மா, எனும் எம். பி.

"போ! போ!! திரும்பிவராமல் அப்படியே போய்விடு!"—என்றார் இன்னொரு மெம்பர்.

"திமிரான போக்கு—நம்மை அவமதிக்கும் செயல். அமைச்சருக்குள்ள லட்சணத்தையும் இழந்தார்" — என்றார், காங்கிரஸ் மெம்பர் தக்கூர்தாஸ் பர்கவா.

"வெட்கம்! வெட்கம்!!"—என்று, கைகொட்டிச் சிரித்தனர், சபையினர்.

"பயந்தாங்கொள்ளி — ஓடிவிட்டார்!" என்றோர், குரல், கூவிற்று.

"நம்மைஏளனப்படுத்திவிட்டார். நாட்டைப் பரிபாலிக்கும் மக்கள் சபையை அவமானப்படுத்திவிட்டார்"—என்றார், டாக்டர் கரே.

"எங்கே, அந்த ஆள்? இழுத்து வாருங்கள் உடனே!" — என்று கர்ச்சித்தார், டாக்டர் ராம்சுபாசிங் எனும் பீஹார் காங்கிரஸ் எம். பி.

*

கண்டனம்! ஏளனம்! குமுறல்! கொந்தளிப்பு! ஆத்திரம்! அதிருப்தி! கூச்சல்! கோபாவேசம்!

இத்தனையும், கடந்த வாரம், டில்லியை அதிரவைத்திருக்கிறது.

டில்லியில்! அதுவும் பாராளுமன்றத்தில்!!

நவரசங்களும் நிரம்பிய அருமையான காட்சிகள், டில்லி பார்லிமெண்டை அதிரவைத்திருக்கின்றன.

அரசியல் மேடையில், மேலே குறிப்பிட்ட அத்தனை 'ரசங்களையும்' காண்பது சுலபம். ஆனால், இப்போது அரசபாரம் தாங்குவோரிடையில் காணக்கிடைத்திருக்கிறது.

மக்கள் சபை! ராஜாங்க சபை!!—இரண்டும்,குஸ்திபோட்டுக்கொண்ட விசித்திரமான நிகழ்ச்சியை 'இந்தியா' வழங்கியிருக்கிறது—உலகுக்கு.

"நான் பெரியவனா? நீ பெரியவனா?" என்று, சிறு குழந்தைகள், வீதியில் சண்டையிட்டுக்கொள்வதைக் கண்டிருக்கிறோம்.

நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பேற்ற கவுன்சில் உறுப்பினரும், பார்லிமெண்டு மெம்பர்களும், சண்டையிட்டுக் கொண்ட காட்சி இப்போதுதான் காணக்கிடைத்திருக்கிறது.

குழந்தைகளுக்கு வீதி! இவர்களுக்கு, அழகான சபை!!

*

"எப்படிச் சொல்லலாம்? — நீர் கூறியது எமது சபாநாயகரை அவமதித்ததாகும்!"

—இது மக்கள் சபையில்.

"சொன்னால், என்ன?"

—ராஜாங்க சபையில்.

"என்னவா? இங்கே வரட்டும் அந்த ஆசாமி!"

—மக்கள் சபையில்.

"அங்கென்னவேலை! ஐயா, நீர் போகக்கூடாது"

—ராஜாங்கசபையில்.

"மந்திரி, மக்கள் சபைக்கு வாராமலிருப்பாரா? பார்க்கிறோம்"

—மக்கள் சபையில்.

இவ்விதம் ஆரம்பித்த 'குஸ்தி' கடைசியில், அபுல்கலாம் ஆசாத் பிடித்திழுக்க, மக்கள் சபையினர் கைகொட்டிச் சிரிக்க, மந்திரியார்

# இதுதான், டில்லி!

பிஸ்வாஸ் வெளியே ஓடுமளவுக்கு வளர்ந்திருக்கிறது.

அவர் வெளியே ஓடியதைக் கண்டதும்தான், "எங்கே அவர்? இழுத்துவாருங்கள்!" என்று கூறியிருக்கிறார் ஒரு காங்கிரஸ் உறுப்பினர்.

*

சட்ட மந்திரி பிஸ்வாஸ் வெளியேறினார், மக்கள் சபையைவிட்டு. அவரை இழுத்துவருமாறு, கூவி இருக்கிறார் ஒருவர்.

அந்தளவுக்கு, கடந்த வாரம், டில்லிமாநகரில் ரசாபாசம் நடந்திருக்கிறது.

நடைபெற்ற இடம், டில்லிப் பாராளுமன்றம்.

நடத்தியோர் ராஜாங்க சபையினரும் மக்கள் சபையினருமாகும்.

காங்கிரஸ்கட்சிக்கும் மற்றஎதிர்க் கட்சிகளுக்குமல்ல, இத்தகராறு,

ஒரு சபைக்கும், மற்றோர்சபைக்கும்.

மக்கள் சபையிலிருக்கும்எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஒரு கட்சி. ராஜாங்க சபையிலிருக்கும் எல்லாக் கட்சிமெம்பர்களும் மற்றோர் கட்சி.

பாண்டவர் கௌரவர் போராட்டம், டில்லிமாநகரில், நடைபெற்றிருக்கிறது.

பிரதம நேரு, மராட்டிய சுற்றுப் பயணம் முடிந்து, டில்லி திரும்ப நாளாகியிருந்தால், விசித்திரமான காட்சிகளைக் கண்டிருக்கலாம்.

அந்தளவுக்கு, இரண்டு சபைகளிலும், ஆத்திரமும் வாய்ச்சண்டையும் கொந்தளித்திருக்கிறது.

அரசுநீதிகளை வகுக்கச்சென்றோர் சுயநீதிப் போராட்டத்தில் இறங்கிய இந்த விசித்திரச் சம்பவத்துக்கு மூலகாரணம், டில்லி மந்திரி பிஸ்வாஸ்.

அவர் வீசிய சிறுபொறி, பெருந்தீயாகி, அவரையே சுட்டுப் பொசுக்கியிருக்கிறது.

வெப்பம் தாங்காது,பண்டிதநேருவிடம் ஓடிப்போய், அபயம் பெற்று தீக்குண்டத்தை அணைத்திருக்கிறார்.

*

பிஸ்வாஸ் டில்லியின் சட்ட மந்திரி. அவர், வெளியிட்ட சிறுசொல் மக்கள் சபைத் தலைவரை அவமதிப்பதாகக் கருதப்படவே, இவ்வளவு அலங்கோலமும் நடைபெற்றிருக்கிறது.

வருமானவரி திருத்த மசோதாவை நிறைவேற்றினர், மக்கள் சபையினர்.

அந்த மசோதா, 'மேல்சபை' யெனக் கருதப்படும் ராஜாங்க சபைக்கு வந்தது.

ஆனால் அம்மசோதாவின்மேல், 'பணமசோதா' என்று மக்கள் சபைத்தலைவர் குறித்திருந்ததால், அது குறித்து ராஜாங்க சபை, பரிசீலனை செய்யவில்லை.

பண சம்பந்தமான மசோதாக்களை அலசி ஆராய்ந்து சட்டம்செய்யும் பொறுப்பு மக்கள் சபைக்கு மட்டுமேயுண்டு — ராஜாங்க சபைக்குக்கிடையாது.

ஆகவே, மக்கள் சபைத் தலைவர், 'பண மசோதா' என்று குறிப்பு எழுதியிருந்தார்.

இந்தக் குறிப்பு ராஜாங்க சபையில் ஆட்சேபிக்கப்பட்டது. இந்த மசோதாவைஎப்படிப்பணமசோதாவென்று கூறலாம்?' என்றனர், சில மெம்பர்கள்.

சபையின் காங்கிரஸ் கட்சித்தலைவராக இருக்கும் சட்ட மந்திரி பிஸ்வாஸ் இதனை விளக்கவேண்டியவரானார். அப்போது, தமக்கும் புரியவில்லையென்றும், மக்கள் சபைத் தலைவர் ஆய்ந்தோய்ந்து பாராமல் குறிப்பு அனுப்பிவிட்டாரோவெனத்தாம் நினைப்பதாகவும்,அவர் தெரிவித்தார்.

இந்த வார்த்தைகள், மக்கள் சபைக்குத் தெரியவந்ததும், எம். பி.க்கள் சீறலாயினர்.

"மக்கள் சபைத் தலைவர் ஒரு முடிவு செய்துவிட்டால், அதனை குறைகூறுவது, அவரை இழிவு செய்வது போலாகும்"

இந்தப் பிரச்னையை எடுத்துக் காட்டி, "எப்படிச் சொல்லலாம், எமது சபாநாயகரை?" என்று கேட்டனர், மக்கள்சபையினர். "இதற்கு விளக்கம் சொல்ல வேண்டும் சட்ட மந்திரி", என்று கேட்டனர்.

மக்கள் சபையின் முடிவைக் கேட்ட ராஜாங்க சபை உறுப்பினர்களோ, "சட்ட மந்திரி எங்கள் சபையின் மெம்பர். அவரை விசாரிக்க, மக்கள் சபைக்கு உரிமை இல்லை. ஆகவே, அவர் அங்குபோய் எவ்விதப் பதிலும் கூறக்கூடாது," என்று தீர்மானம் செய்தனர். பிஸ்வாஸ், ராஜாங்க சபை உறுப்பினர் மட்டுமல்ல, சட்டமந்திரி. மந்திரிகள், இரண்டு சபைக்கும் பொறுப்பாளியாவர்—குறிப்பாக, மக்கள் சபைக்குக் கட்டுப்பட்டவர். எனவே, என்ன செய்வதென்று தெரியாது விழித்தார். கடைசியில், மக்கள் சபைக்கு வந்தார். அவர் உமர்ந்ததும், மேல் சபையில் அவர் பேசியது குறித்து சில பிரச்னைகளை எழுப்பப்போவதாக தாகூர் தாஸ்பர்கவா எழுந்து பேசினார்.

மேற்படி விஷயம் குறித்து சபை விவாதிப்பதாக இருந்தால். தான் வெளியேறிச் செல்லநேரிடும் என்று வெளியிட்டார், பிஸ்வாஸ்.

அதைக் கவனியாது, மேலும் மேலும், பலர் பேசத் தலைப்பட்டனர்.

பொறுக்காத பிஸ்வாஸ், துள்ளி எழுந்தார்! வெளியே நடந்தார்!!

அப்போதுதான், நாம் தலைப்பிலே காட்டிய. அத்தனை வார்த்தைகளும் வீசப்பட்டன.

*

சபாநாயகரின் தீர்ப்பில் குறை கூறியது.

மக்கள் சபைக்குப் போகக்கூடாதென ராஜாங்க சபை முடிவு செய்தது.

விவாதம் நடக்கும் போது அவர், வெளியேறியது.

இவ்விதம் பிரச்னைகள் உருவாகிப் பெரும் போராட்டம்; நடைபெற ஆரம்பித்து விட்டது.

கடைசியில் பண்டித நேரு, வெளியூர்ப் பயணம் முடிந்து, வந்ததும்இரண்டுசபைகளுக்கிடையிலும் சமரசம் செய்து வைத்திருக்கிறார். பிஸ்வாஸ்; மக்கள் சபையில் தனது நடவடிக்கைகளுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

விசித்திரமான விநோதங்கள், இரண்டு சபைகளையும் எதிரிகளாக்கி 'எதுபெரியது?' எனும் சர்ச்சைக்கு இழுத்துச் சென்றிருக்கிறது.

இந்த வெட்கக்கேட்டுக்கு மூலகாரணம், டில்லி சர்க்காரின் மந்திரி.

அவர் வீசிய சிறு சொல் இத்தகைய பிரச்னையை உருவாக்கிவிட்டது.

சபாநாயகர், எக்கட்சியினராயிருந்தாலும், எதிர்த்துப்பேச மாட்டார்கள். அவருக்கு, பூர்ண மரியாதை அளிக்கவேண்டும் என்பது, ஜனநாயக சம்பிரதாயம்.

இதற்குமாறாக நடந்துகொண்டிருக்கிறார், அமைச்சர் பிஸ்வாஸ்.

சபாநாயகர் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து 'பண மசோதா' என்று குறிப்பு எழுதிவிட்டார்—இதை, பிஸ்வாஸ் வெளியிட்டது.

இப்படி அவர் கூறியது, சரியா என்று பார்த்தால், சரியல்ல.

எந்த மசோதாவையும் நிர்மாணிக்கவேண்டிய பொறுப்பு, சபாநாயகருடையது.

ஆனால், இந்த மசோதா விஷயத்தில், சபாநாயகர் பலமுறை சட்ட நிபுணர்களின் கருத்தைக் கேட்டறிந்த பிறகே, மேற்படி குறிப்பை எழுதியிருக்கிறார்.

அவர் ஆலோசனை செய்தது சட்ட இலாகாவை.

சட்ட இலாகாதான், மேற்படி குறிப்பு எழுதக் காரணமாகும்.

சட்டமந்திரியோ, சபாநாயகர் ஆலோசியாமல் எழுதியது, என்கிறார்.

சபாநாயகருக்கு ஆலோசனை வழங்கியதோ, சட்ட இலாகா! சட்ட இலாகாவோ சட்ட மந்திரிக்குக் கட்டுப்பட்டது!!

தன்னுடைய இலாகாவில் நடைபெற்ற சம்பவம், சட்ட மந்திரிக்குத் தெரியவில்லை.

எவ்வளவு வேதனையான விசித்திரம்!

தனது இலாகாவில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூடத்தெரியாமல், காலங்கழித்து வருகிறார்கள், டில்லி மந்திரியினர்.

எவ்வளவு பெரிய வெட்கக்கேடு, இது!!

இந்தப் போக்கால், உலகமே கண்டு, கேலிசெய்யுமளவுக்கு இரண்டுசபைகளும், டில்லியை 'குருக்ஷேத்ரபூமி' யாக்கிக் கொண்டிருக்கின்றனர்,

சட்ட நுணுக்கம் தெரியாததை மட்டுமல்ல, பிஸ்வாஸ், காட்டிக்கொண்டது — தனது இலாகாவையும் சரிவரக்கண்காணிப்பதில்லையென்பதையும்,வெளிப்படுத்திக்கொண்டுவிட்டார். இத்தகைய 'விசித்திரமுருவங்களை'க் கொண்டிருக்கிறது, டில்லி பீடம்! இந்த உருவங்களுக்காகப் பரிந்து பேசுகிறார், பண்டித நேரு.

உலகமோ, கேலியோடு, பார்க்கிறது, இந்த உபகண்டத்தை.

ஜனநாயகம், தலை குனியக் கூடிய நிகழ்ச்சிகளை அமைச்சர் ஒருவரே ஆரம்பித்துமீளாதஅவமானத்தைத் தேடித்தந்திருக்கிறார்.

அதனைக் கண்டும், பண்டிதநேரு, பரிவு காட்டுகிறார்.

விஷயம் தெரியாதவர்களால், நமது மானம் பறிபோகிறது! அவர்களோ ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கியவண்ணம் அமர்ந்திருக்கிறார்கள்!!

## அரக்கோணம் பொதுக்குழு ஏற்பாடுகள்

31—5—53ல் நடக்கும் பொதுக்குழுவிற்கு வரும் உறுப்பினர்கள் தங்க, குளிக்க இடவசதி "கமலம்மாள் நிலயத்தில்" ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பொ. கு. உறுப்பினர்களுக்கு உணவும், சிற்றுண்டியும் அளிக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அன்று மாலை 6 மணிக்கு வ. ஆ. மாவட்டச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச் செயலாளர் அண்ணா கலந்துகொள்வார்.

# அரசாங்கப் பொருளாதாரம்

[ஏ. இருதயராஜ், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்.]

### மக்கள் வரி கொடுக்கும் சக்தி

ஒருநாட்டின்செல்வம்எவ்வளவு? அந்நாட்டு மக்களின் வருமானம் என்ன? மொத்தத்தில் அவர்கள் பேரில் சுமத்தக்கூடிய வரிப்பளு எவ்வளவிருக்கலாம் என்பவை போன்ற பிரச்சனைகள் முக்கியமானவை.

இந்தியாவைப்போல் நாட்டின் செல்வம் ஏராளமாக இருந்தும், மக்களின் மொத்த வருமானம் குறைவாகவும், பிரிட்டனில் இருப்பதைப்போல் நாட்டின் செல்வம் குறைந்தும் ஆனால் மக்களின் மொத்தம் வருமானம் அதிகமாக இருப்பதும் சகஜம். நாட்டின் செல்வத்தை எந்த விதத்தில் உபயோகப்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது மக்களின் மொத்த வருமானம்.

பிரிட்டனில் மக்களின் மொத்த வருமானத்தில் ஐந்திலொரு பாகத்தை வரிகளின்மூலம் அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. அமெரிக்காவில் வரிப்பளு அதைவிடக்குறைவானது.

மக்களின் மொத்த வருமானத்தின்பேரில் எவ்வளவு வரிப்பளுவை சுமத்தலாமென்பது பல காரியங்களைப் பொறுத்திருக்கிறது. முக்கியமாக நாட்டின் ஜனத்தொகையைப் பொறுத்திருக்கிறது. ஜனத்தொகை அதிகமிருந்து செல்வமும் ஏராளமாயிருந்து அது சரியாக உபயோகிக்கப்பட்டால் வருமானம் அதிகமிருக்கும். ஆகவே மக்கள் வரி கொடுக்கும் சக்தி அதிகமாயிருக்கும். ஆனால் நாட்டின் வளம் குறைவாயிருந்து ஜனத்தொகை அதிகமிருந்தால் வருமானம் குறைவாகவும், மக்களின் வரிகொடுக்கும் சக்தி குறைவாகவும் இருக்கும்.

ஒரு நாட்டின் ஒரு சிலரே அதிக வருமானமுடையவராகவும், பெரும்பான்மையோர் குறைந்த வருமானமுடையவராகவும் இருந்தால்அங்கே மொத்தத்தில் வரி கொடுக்கும் சக்தி அதிகமிருக்கும். ஆனால் அதிக வரி வருமானம் வரும் என்ற காரணத்துக்காக ஒரு நாட்டில் செல்வம் ஒரு சிலருக்கே சொந்தமாகவும் மற்றவர்களெல்லோரும் ஏழைகளாகவும் இருக்கவிட்டுக்கொண்டிருக்கக்கூடாது. ஏனெனில் வரியின் மூலம் அதிக வருமானம் வருகிறதென்பது ஒன்றே ஒரு நாட்டுக்குப் பெருமை தரக்கூடியதல்ல. அங்கு மக்கள் களிப்புடன் வாழமுடியாது. ஆனால் ஒரு நாட்டில் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசங்கள் அதிகம் இல்லாமல் ஏற்றத்தாழ்வுகள் குறைந்திருந்தால் வரி வருமானம் அதிகமில்லாவிட்டாலும் அந்நாட்டில் மக்கள் சந்தோஷமாக வாழ்வார்கள் என்பது நிச்சயம்.

யுத்த காலத்தில் ஒரு நாட்டின் வாழ்வே அபாயத்திலிருக்கும் போது, நாட்டைக்காப்பாற்றுவதற்காக மக்கள் குறை கூறாமல் மேலும் மேலும் விதிக்கப்படும் பிரியத்துடனேயே வரி கொடுக்க முன்வருவார்கள். ஆதலால் அம்மாதிரிநெருக்கடியானகாலங்களில் அரசாங்கம் அதிகமான வரிப் பளுவை சுமத்தலாம். ஆனால் அதே மக்கள்சாதாரணகாலங்களில் அதிகமான வரி கொடுக்கப் பின் வாங்குவார்கள். ஆதலால் மக்கள் வரி கொடுக்கும் சக்தி, காலம், மற்றும் சமய சந்தர்ப்பங்களைப் பொறுத்திருக்கும்.

வரி கொடுக்கும் சக்தி ஒரு நாட்டில் விதிக்கப்படும் வரிகளின் தன்மையைப் பொறுத்தும் இருக்கும். ஒரு நாட்டின் சாமான்களின்மேல் விதிக்கப்படும் மறைமுகமான வரிகள்மட்டும் இருந்து வரிப்பளுவும் அதிகமாக அதிகமாகச் சுமத்தப்பட்டால் பெருவாரியான மக்களுக்கு அதிக சிரமம் ஏற்படும்.

அரசாங்கம் வரி வருமானத்தை போக்குவரத்து சாதனங்களைப் பெருக்குவதற்கும், கல்வியைப் பரப்பவும், சுகாதாரத்தை வளர்க்கவும், விவசாயத் தொழில் அபிவிருத்திக்காகவும் செலவிட்டால், அங்கு மக்களின் வருமானம் பெருகுமாதலால், வரி கொடுக்கும் சக்தியும் வளரும். ஆனால், வரிப்பணம் விரயமாக யுத்த காரியங்களில் செலவிடப்பட்டாலும், வெளிநாடுகளிலிருந்து வாங்கிய கடன்களைத் திருப்பித் தரவும் அதற்கு வட்டி தரவுமே அதிகமாகச் செலவிடப்பட்டாலும், அந்நாட்டின் மக்களுடைய மொத்த வருமானம் வர வரக் குறையும். அதனால் அவர்களின் வரி செலுத்தக்கூடிய சக்தியும் குறையும்.

அரசாங்கத்தின் பொதுப் பணிகளுக்காக மக்களுக்கு சிரமமில்லாமல் எவ்வளவு பணம் அவர்களிடமிருந்து வசூலிக்க முடியுமோ அதுதான் ஒரு நாட்டின் மொத்த வரி கொடுக்கக் கூடிய சக்தி, அம்மக்களின் மேல் அரசாங்கம் சுமத்தக் கூடிய மொத்த வரிப் பளு.

ஒரு நாட்டின் மொத்த வருமானத்திலிருந்து தொழில், விவசாயம், முதலிய காரியங்கள் எப்பொழுதும் போல் நடைபெறத் தேவையான தொகையைக் கழித்தால்,மிஞ்சியிருக்கும் தொகையே அந்நாட்டின் வரி கொடுக்கக் கூடிய சக்தி. அத்தொகைக்கு மேற்பட்ட வரிப் பளு மக்கள்மேல் சுமத்தப்பட்டால், தொழில் விவசாயம் முதலிய காரியங்களுக்குப் போதிய பணம் இராது. அதனால் அவை பாதிக்கப்பட்டு மக்களின் மொத்த வருமானம் குறையும். மக்களின் வாழ்க்கைத் தரம் குறையும். அவர்கள் பொருள் உற்பத்திச் சக்தியும்குறையும். அதனால் அவர்களின் வரி கொடுக்கும் சக்தியும் நாளடைவில் குறையும்.

எனவே வரிப்பளுவினால் பொருள் உற்பத்தி நாட்டில் பாதிக்கப் படாமலும், மக்களின் வாழ்க்கைத்தரம் குறையாத விதத்திலும் பார்த்துக்கொள்ள வேண்டும். அது மட்டும் போதாது. நாட்டின் வளர்ச்சியை உத்தேசித்து உற்பத்தி சக்தியும் வாழ்க்கைத்தரமும் குறையாமல் பார்த்துக் கொள்வதோடு, ஒவ்வொரு ஆண்டும் சிறிதளவாவது அவை வளரும்படி பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

ஒரு நாட்டின் மொத்த வரி கொடுக்கும் சக்தி அல்லது சுமத்தக்கூடிய மொத்த வரிப்பளுவை அளவிட முடியும். பிரிட்டனில் ஒவ்வொரு பிரஜையினுடைய வருமானத்தையும்கணக்கெடுத்துக் கூட்டிப்பார்த்து நாட்டின் மொத்த வருமானத்தை நிர்ணயிக்கிறார்கள்.

தொழில், விவசாயம் முதலிய ஒவ்வொரு துறையிலும் உற்பத்திக் கணக்கை எடுத்தும் ஒரு நாட்டின் மொத்த வருமானத்தை நிர்ணயிக்கலாம். இந்தியாவில் இந்த முறைப்படிதான் கணக்கெடுக்க முடியும். ஒவ்வொரு பிரஜையுடைய வருமானத்தையும் கணக்கெடுப்பது என்பது சாத்தியமானதல்ல. நில வரி வசூல் கணக்கிலிருந்து இந்தியாவின் விவசாய உற்பத்தியைக் கணக்கிட முடியும். 1871-ம் வருஷம் தாதாபாய் நௌரோஜி என்பவர் இந்தியாவின் விவசாய வருமானம் 277 கோடி என்றும், மற்றைய வருமானம் 63 கோடி என்றும் கணக்கிட்டார். இம்மாதிரி மொத்த வருமானத்தை ஜனத்தொகையால் வகுத்தால் ஒரு பிரஜையின் வருமானத்தை கண்டு பிடிக்கலாம். 1881-ல் ஒரு இந்தியனின் சராசரி வருஷ வருமானம் 27 ரூபாயென்றும் 1901-ல் 30 ரூபாயென்றும், 1911-ல் 80 ரூபாயென்றும் கணக்கிடப் பட்டுள்ளது. இங்கிலாந்தில் 1913-14-ல் மொத்த வரி கொடுக்கும் சக்தி 145,60,00,000 ரூபாயென்றும், 1921—ல் 189,80,00,000 ரூபாயென்றும் கணக்கிடப்பட்டது. இந்தியாவிலே வளமிருந்தும், இயற்கைச் செல்வம் அதிகமிருந்தும் வரிவசூல் அதிகம் குறைவாகயிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் பெரிய வருமானங்களின் மேல் அதிக வரிகள் விதிக்காததும், விவசாய வருமானங்கள் பேரில் உயரும் விகிதாசார முறையில் வருமான வரி விதிக்காததுமே. மேலும் நாட்டில் முக்கால் வாசிப்பேர்களுக்கு மேலாக ஏழைகள் என்பதும் ஒரு காரணம் தான்.

### வரிவிதிப்பின் விளைவுகள்

விதிக்கப்படும் வரி குறைந்த வருமானங்களின் மேல் விழுந்தால் வாழ்க்கையின் அவசியத் தேவைகளை பூர்த்தி செய்யப்படமாட்டாது. அதனால் வேலைசெய்யும் சக்தி குறையும். நாட்டில் பொருள் உற்பத்தி குறையும். அது போலவே போஷிப்புக்குத் தேவையான உணவுப் பொருள்களின்மேல் வரி விதித்தால் அவைகளின் விலை உயர்வால் ஏழைகள் பாதிக்கப்படுவர். அவர்களுடைய வேலைசெய்யும் சக்தி குறைந்து, அதனால் தொழில் உற்பத்தி கெடும். அதனால் வரி விதிக்கும்போது மக்களுடைய உடல் நலம் கெடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். உடல் நலம் குன்றினால் தற்பொழுது தொழில் உற்பத்தி தடைபடும் என்பது மாத்திரமல்ல, நாட்டின் வரப்போகும் சந்ததியாரின் தரத்தையும் குறைத்து வருங்காலத்திலும் நாட்டுக்கு கேடு விளையலாம்.

குடும்பத் தேவைகளுக்குப் போக மிஞ்சியிருக்கும் சேமிப்புத் தொகையின் மேல் வரி விதிப்பு விழுமானால், மக்களின் சேமிப்பு சக்தி குறையும். ஏழைகள் மேல் விழும் வரிகள் மட்டுந்தான் இவ்விதம் சேமிப்பைப் பாதிப்பதில்லை, அவர்களுக்கு சேமிக்கும் சக்தி இல்லை என்ற காரணத்தால். பணக்காரர்களின்மேல் விழும் வரிகள் மற்றக் காரணங்களைக் கொண்டு நியாயமானவை விரும்பத்தகுந்தவை என்ற போதிலும், அவை நாட்டின் சேமிப்புச் சக்தியைக் குறைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வரிகள் விதிக்கப்படும் போது எல்லோரையும் அவை ஒரே விதமாகப் பாதிப்பதில்லை. அதிக வருமானம் உள்ள ஒருவன்மேல் வரி விதிக்கப்பட்டால், வரி கொடுப்பதால் தன்னுடைய வாழ்க்கைத் தரம் குறையுமென்று பயந்து அது குறையாமல் பார்த்துக்கொள்ளுவதற்காக வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முன்னிலும் அதிகமாக ஊக்கத்துடன் உழைக்கவும் சேமிக்கவும் விரும்பலாம்.

அதிக வருமானம் பெற்று அதிகம் சேமித்தால் அதிக வரி கொடுக்க வேண்டுமென்று பயந்து, சிலர் அதற்காக உழைக்கவும் சேமிக்கவும் தன் விருப்பத்தை குறைத்துக் கொள்பவர்களுமுண்டு. ஆகவே வரி கொடுப்பவரின் தரத்தையும் சுபாவத்தையும் பொறுத்திருக்கிறது,வரிவிதிப்பதனால் அவர்களுக்கு உழைக்கவும் சேமிக்கவும் இருக்கும் விருப்பம் குறைவதும் கூடுவதும்.

திடீரென்று எதிர்பாராமல் கிடைக்கும் செல்வத்தின்மேல் வரி விதித்தால் அதனால் உழைக்கவும் சேமிக்கவும் உள்ள விருப்பம் குறையாது. செல்வமே எதிர்பாராது கிடைக்கும்பொழுது, வரியையும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஆதலால் வரி விதிக்கப்படும் என்று பயந்து உழைக்கும் சக்தியையோ சேமிக்கும் சக்தியையோ யாரும் குறைத்துக்கொள்ள மாட்டார்கள். ஒரு நகரத்தில் ஜனநெருக்கடி இல்லாத இடத்தில் ஒருவர் 100-ரூபாய்க்கு ஒரு இடம் வாங்குகிறார். காலக்கிரமத்தில் அவருடைய இடத்துக்கருகாமையில் ஒரு பெரிய ஆலை ஆரம்பிக்கப்படுகிறது. ஆலையைச் சுற்றி ஜனங்கள் குடியேறுகிறார்கள். வீடுகளும் கடைகளும் தோன்றுகின்றன. அங்குள்ள மனைகளெல்லாம் புதிதாய் உண்டாயிருக்கும் தேவையினால் அதிக விலைக்கு வாங்கப்படுகின்றன. ரூ 100-க்கு வாங்கின அதே இடம் ரூ 1000-க்கு அல்லது ரூ 2000-க்கு கூட விலையாகிறது. இம்மாதிரி எதிர்பாராது வரும் செல்வத்தின் மேல் வரி விதிக்கப்படுவதில் தவறொன்றும் இல்லை. சமூகவளர்ச்சியால் அந்த இடம் மதிப்பில் உயருகிறது. அந்தவிலை ஏற்றத்தில் அரசாங்கம் வரியாக ஒரு பாகம் எடுத்துக்கொள்வது நியாயமே. அம்மாதிரி வரி விதிக்கப்படும் என்று முன் கூட்டியே தெரிய முடியாது. ஏனெனில் விலை ஏறும் என்று முன்கூட்டியே தெரிவதில்லை. அதனால் இம்மாதிரி வரிகளால் உழைக்கும் சக்தியோ

**P. T. C.**

Become an Engineer, or a Technician and earn more than Rs. 200 a month by joining one of our following courses:-

1. Civil Engineering
2. Mechanical Enginecrig
3. Electrical Engineering
4. Radio Engineering
5. Wireless Telegraphy

Courses begin in June and run for 9 months.

ARTS COURSE

Success guaranteed to every student for S. S. L. C. Matric, Inter, B. A., B. Sc., Hons., B. Com.

Tution: Oral and Postal

Hostel and Laboratory attached

Special accomodation for Ladies.

Office:
29, Nandhi koil St.,
Teppakulam, Trichy.

P. V. PARTHASARATHI,
PRINCIPAL.

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

---

சேமிக்கும் சக்தியோ குறைவதில்லை.

நகரங்களில் நிலத்தின் விலை ஏறுவதைக்கூடச்சில சமயங்களில் எதிர்பார்ப்பது சாத்தியமாகும். எதிர்பாராத செல்வம் என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் போட்டிப்பந்தயங்களில் கிடைக்கும் பரிசு. பரிசுகளை யாரும்நிச்சயமாக எதிர்பார்க்க முடியாததலால், யாரும் வரி விதிக்கப்படும் என்று பயந்து தங்கள் உழைக்கும் சக்தியையோ சேமிக்கும் சக்தியையோ குறைத்துக் கொள்ள மாட்டார்கள்.

சில சமயங்களில் சர்க்காரிடம் இருந்து சலுகை பெற்று போட்டியின்றி தான் இஷ்டப்பட்ட விலைக்கு ஒருவன் சாமான்களை விற்கிறான். அவன் மேல் வரி விதிக்கப்பட்டால் அவன் சாமான்களின் விலையை ஏற்றி ஈடு செய்து கொள்ள முயற்சிப்பானே தவிர, வரி விதிப்புக்குப் பயந்து தான் உற்பத்தி செய்வதையோ சேமிப்பதையோ சிறிதும் குறைத்துக் கொள்ளமாட்டான.

ஒருவன் தானே தன் முயற்சியால் சம்பாதிக்கும்வருமானத்தின் பேரில் வரி விதிக்கப்பட்டால் அவனுடைய உழைக்கும் சக்தியும், சம்பாதிக்கும் முயற்சியும் குறையும் சேமித்து வைக்கவேண்டும் என்ற எண்ணமும் போய்விடும் பிறர் முயற்சியால் ஒருவனுக்குப் பரம்பரையாக வந்த சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின மேல் வரி விதிக்கப்பட்டால் அதனால சேமிக்க வேண்டும் என்றிருக்கும் விருப்பம் குறையும். ஆனால் உழைக்க வேண்டும் என்ற எண்ணம் குறையாது. ஆகவே சொந்த முயற்சியினால் வரும் வருமானத்தின் மேல் அதிக வரி விதிப்பது நல்லதல்ல.

அதிகமாக வரி விதிப்பதால் சில விபரீத விளைவுகளும் தோன்றலாம். பஞ்சு ஆலைகளின் வருமானத்தின் மேலோ உற்பத்தியின் மேலோ அதிக வரி விதித்தால் பஞ்சு ஆலை முதலாளிகள் மெதுவாக அந்தத் தொழிலை விட்டு விட்டு வரித் தொல்லை இல்லாத மற்றத் தொழில்களில் பிரவேசிக்க முயற்சிப்பார்கள். வீடுகளின் பேரில் விதிக்கப்படும் வரியை உயர்த்தினால் வீடுகள் அதிகம் வைத்துக்கொண்டு வாடகைக்கு விட்டுக் கொண்டிருக்கும் பணக்காரர்கள் மெதுவாக வீடுகளை விற்று விட்டு நிலம் வாங்குவதற்கோ அல்லது வரி விதிப்புக்குப் பயமில்லாத வேறு தொழில்களை நடத்தவோ முனைவார்கள்.

ஒரே நாட்டில் இருக்கும் பல பிரதேசங்களில் பலவிதமான வரிகள் தொழில் வருமானத்தின் மேல் விதிக்கப்பட்டால், அதிக வரி விதிக்கப்படும் பிரதேசத்தை விட்டு, செல்வம் வரித் தொல்லை அதிகமில்லாத மற்றப் பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டுவிடும் சென்னை ராஜ்யத்தில் வரிப்பளுவை அதிகரித்தால வியாபாரிகள், தொழிலரசர்கள் தங்கள் தொழிலையும் வியாபாரத்தையும் வரி விதிப்பு அதிகமில்லாத மற்ற ராஜ்யங்களுக்கு மாற்றிக்கொள்ளக்கூடும்.

மேற்கூறிய விளைவுகள் ஏற்படுகின்றன என்ற காரணத்திற்காக வரிகளே விதிக்கக்கூடாது என்பது அர்த்தமல்ல. வரி விதிப்பால் ஓரளவுக்கு உழைக்கும் சக்தி குறைவதும், உழைக்க, சேமிக்க இருக்கும் விருப்பம் குறைவதும் உண்மைதான். ஆனால் வரியாக வசூலிக்கப்படும் பணம் பூராவும் விரயமாக்கப்படுவதில்லை. ஆற்றிலோ குளத்திலோ அரசாங்கம் அதைக்கொட்டி விடுவதில்லை. தொழில் வளர்ச்சிக்காக, கல்விக்காக மற்றும் மக்களுக்கு பல நல்ல காரியங்களுக்காக அதைச் செலவிடுகிறது. அதனால் நாளடைவில் நாட்டின் தொழில் உற்பத்தி, சேமிக்கும் சக்தி முதலியவைகள் வளரும். உழைக்கவும் சேமிக்கவும் உள்ள விருப்பமும் வளரும். அதனால் வரி விதிப்பின் விளைவுகளை மட்டும் பார்த்துவிட்டு அரசாங்கத்தைக் குறை கூறாது வரிப்பணத்தை அரசாங்கம் செலவு செய்வதன் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் சகாயங்களையும் அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, மொத்தத்தில் நாட்டுக்கு நன்மை ஏற்பட்டதா இல்லையா என்று முடிவு செய்வதே முறையாகும்.

வரி விதிப்பின் மூலம் சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்கி விடலாம். உயரும் விகிதாசாரமுறையில் பெரிய வருமானங்களின் மீது அதிக வரிகளை விதித்து, செல்வம் ஒரு சிலரிடமே குவிந்து கொண்டு போவதைத்தடுக்கலாம். ஆனால் அவ்விதம் வரிவிதிப்பதால் தொழில் வளர்ச்சி தடைபடாமலும் வரிக்கு பயந்து பணக்காரர்கள்தங்கள்பணத்துடன் நாட்டைவிட்டுவெளியேறுதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வரி விதிப்பின் மூலம் சில சமயங்களில் அரசாங்கம் கெடுதிதரக்கூடிய சாமான்களை மக்கள் உபயோகிப்பதைக் குறைக்கவோ, தடைசெய்யவோ முடியும். சாராயம், அபின் முதலியவைகளின் மேல்வரிவிதித்து அவைகளின் விலையை உயர்த்துவதின் மூலம் அவைகளை பெருவாரியான மக்கள் உபயோகிப்பதைக் குறைக்கலாம்.

வரி விதிப்பின் மூலம் நாட்டில் தொழில் வளர்வதற்குஉதவி செய்யவும் முடியும். உள்நாட்டில் தயாராகும்சாமான்களுடன் வெளிநாட்டு சாமான்கள் போட்டியிருக்கும் போது வெளிநாட்டுச்சாமான்களின் மேல் இறக்குமதித் தீர்வை விதித்து அவைகளின் விலையைஉயர்த்தி உள்நாட்டுச்சரக்குகளுடன்போட்டியிட முடியாமற் செய்யலாம்.

✲

6-ம் பக்கத் தொடர்ச்சி

6. தென் இந்தியாவானது ஆரியரின் வருகைக்குமுன், முழுவதும் திராவிட நாடாகவே விளங்கியது.

7. ஜாதிமுறைகளை வகுத்தவர்கள் ஆரியர்கள்தான்.

8. திராவிடர்களின் சமூக அமைப்பு நன்கு அமைந்திருந்தது. அவர்களிடையே சாதி வேற்றுமை இல்லை.

இவை போன்ற இன்னும் எத்தனையோ சரித்திரச் சான்றுகள் ஆரியர் வேறு, திராவிடர் வேறு என்பதற்கு எடுத்துக் காட்டுகளாக உள்ளன.

இவற்றை எல்லாம் அன்பர் ஆச்சாரியார் மறைத்துவிட்டு, மதத்தைப் பாதுகாப்பதன் வாயிலாகத் தம்மவருக்கு ஆக்கந்தேட முயல்கிறார்.

"மத எதிர்ப்புத் தொடங்கப் போகிறது, மார்பில் பூணூல் அணிந்திருக்கும் மறையவர் பெருமக்களே! தயாராகுங்கள் போருக்கு! உங்கள் இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துங்கள்! நரம்புகளுக்கு வலுவேற்றுங்கள்! வெற்றி நமதே!"

என்று எச்சரிக்கையும் வேண்டுகோளும் விடுகிறார். சும்மா கிடக்கும் சங்கை ஊதிக் கெடுக்கிறார். ஆச்சாரியார்! ஆரியராவது திராவிடராவது என்று பேசிய ஆச்சாரியார் ஆரியரை அறைகூவி அழைக்கிறார், திராவிடர் மீது போர்தொடுக்க வாருங்கள் என்று! இதனைத், திராவிடரின் நல்வாழ்வுக்கு வழி கோலும் ஒரு நல்ல திட்டமாகக் கருதுகிறோம் —ஆச்சாரியாரின் அறைகூவலை ஆர்வத்துடன் வரவேற்கிறோம்— ஆச்சாரியாரின் போர் முரசொலியை எதிர்பார்க்கிறோம் என்பதை நினைவூட்டுக் கொள்வதுடன், அவரவர்களின் போராட்டமே, அவரவர்களுக்குப் பெரிது என்று கருதும் குறைமதி படைத்தவர்கள் நாமல்லவென்பதையும், திராவிடமக்களின் நல்வாழ்வுக்காக எந்த முகாமில் யார் போர் தொடுத்தாலும் அந்த முகாமில் திராவிடர்கள் பங்கு பெற்று வெற்றி காண்பதில் ஒத்துழைப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

# விஞ்ஞானக் குறிப்புகள்

(பிரரங்கோயிஸ் லே லயோனேய்ஸ் எழுதுவது)

### கடல் சக்தி

உலகிலுள்ள நீர்ப் பாகங்களில் சக்தி அதிகப்படியாக இருப்பதால், அதன் ஒரு பகுதிமட்டும் மனிதர்களின் தேவை அனைத்தையும் நிறைவேற்றிவைத்துவிடும். அலைகளிலிருந்து புறப்படும் சக்தியை உபயோகித்துக்கொள்ள மனிதர்கள் நீண்டகாலமாக கனவு கண்டு வந்தனர். ஆனால், இந்த சக்தி ஒழுங்காகக் கிடைப்பதில்லை, இதை எதிர்பார்த்திருக்கவும் சாத்தியமேற்படுவதில்லை. இந்த முறையில் பரீட்சை செய்து பார்க்கவும் விஞ்ஞானிகளுக்கு நிச்சயம் ஏற்படவில்லை. அலைகள் ஏறுவதாலும் இறங்குவதாலும் ஏற்படும் சக்தி மிகவும் நிச்சயமுடையதாக இருக்கிறது. இந்த சக்தியின் ஒரு பகுதியைத் தான் நாம் உபயோகித்துக்கொள்ள முடிகிறது. அதுவும் சில குறிப்பிட்ட இடங்களில்தான் இதன் உபயோகத்தைப் பெற முடிகிறது. கடலின் உஷ்ண சக்தியைப் பயன்படுத்திக் கொளவதற்கு சரியான விஞ்ஞான அறிவும், தொழில் நுட்ப முறைகளும் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டியிருக்கிறது. பல்வேறு ஆழங்கள்உள்ள இடங்களின் உஷ்ண அளவைப்பற்றியும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பூமத்ய ரேகைப் பகுதியிலுள்ள சுடுநீரும் குளிர்ந்த நீரும் கலக்கும் போது நீண்டநேரம் தனித்தனி படலங்களாக இருப்பதுண்டு. உஷ்ண மோட்டார்களை இயககுவதற்கு இந்த சீதோஷ்ண நிலை வேறுபாட்டை நாம் பயன் படுத்திக் கொள்ளலாம்.

### காயமேற்பட்டவுடனே வலி?

நமது பல்வேறு உணர்வுகளும், குறிப்பாக வலியின் உணர்வுகளும் பாதிக்கப்பட்டதிலிருந்து மூளைக்குப்பாயவேண்டியிருக்கிறது. அங்குதான் இதன் தன்மை உணரப்படுகிறது. நரம்புகளின் வழியாக இவை நொடிப் பொழுதில் மூளையை அடைந்து விடுகின்றன. 1913-ம் ஆண்டில் புரபலர் பியரோன் காட்டிய பரீட்சார்த்த முறைகள் மூலம் வலியின் தன்மைக்கேற்ப இதன் வேகம் ஏற்படுகிறதென்று தெரிய வந்தது. தீப்புண்களால் ஏற்படும் வலி விநாடிக்கு 4 மீட்டர்(13 அடி) வேகத்தில் பாயகிறது. கிள்ளுவதால் ஏற்படும் வலி விநாடிக்கு 12 மீட்டர் (39 அடி) வேகததில் பாய்கிறது. வண்டுகள் கொட்டுவதால் ஏற்படும் வலி விநாடிக்கு 16 மீட்டர் (52 அடி) வேகத்தில் பாய்கிறது.

### பௌதீக சாஸ்திரிகள் —இறுதி வஸ்துக்கள்

மின்வலியுடைய அம்சங்களையும், விநோத வாயுவுக்களின் மினவலியையும் மின்வலியுடைய திரவப் பொருட்களையும் ஆராய்ச்சி செய்ததில், பத்தொன்பதாம் நூற்றூண்டு இறுதியில், அணுவைவிட சிறிதான நெகடிவ் எலக்டரோன் அல்லது நேகரட்ரோன் என்பது ஜின்பெரின் அவர்களாலும் ஜே. ஜே தாம்சன் அவர்களாலும் கண்டுபிடிக்கப்பட்டது. 1930ம் ஆண்டில்தான் சித்தாந்த ரூபமான பரிசீலனைகளால் டிராக் எனபவர் மின்னணு அல்லது பாஸிட்ரான் என்பதைக் கண்டு பிடித்தார். இதை ஆண்டர்சன் இரண்டு வருடங்கள் கழித்து பரீட்சார்த்த ரூபமாக அறுதியிட்டார். இருபதாம் நூற்றூண்டு ஆரம்பத்தில் ரேடிய கிளர்ச்சிகளைப்பற்றி பரிசீலனை செய்தபோது புரோட்டோன்பற்றிய விளக்கங்கள் கிடைத்தன. 1932ல் நியூட்ரோன்பற்றிய விளக்கங்கள் கிடைத்தன. போட்டோ-எலக்ட்ரிக அபச பரிசீலனையும், தொகை சித்தாந்த பரிசீலனையும் ஒளியில் போட்டோன்களின் அம்சங்கள் இருக்கின்றன என்ற உண்மையை விளக்கி வைத்தது. தற்கால பௌதீக சாஸ்திரிகள் மேஸோன்ஸ் என்பதுபற்றி தீவிர ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றவர். இது காஸ்மிக் கிரணங்களில எதிர்நடை போடுகின்றது. மேஸோன்களில் பல்வேறு விதவகைகளுண்டு சிலவற்றில் உடன்பாடு மின்வலியும் சிலவற்றில் எதிர்மறை மின்வலியும், சிலவற்றில் மத்திய அம்சமுள்ள மின்வலியும் இருக்கின்றன. இவையனைத்தும் பௌதீக சாஸ்திரத்தின் பல்வேறு நியதிகளைப் பின்பற்றுகின்றன நியூட்ரினோ. அன்டி — நியூட்ரினோ போன்ற அம்சங்களும் இருக்கின்றனவென்று பெரும்பாலான பௌதீக சாஸ்திரிகள் கூறுகின்றனர், இவற்றில் மாசுகளோ அல்லது மின்வலிகளோ கிடையா. டெமிபோட்டோன்களுக்கு சமதையான சக்தி தான் இவற்றில் இருக்கின்றது. இந்த கூறுகளைப் பரிசீலனை செய்வது மிகவும் முக்கியம். பௌதீக ஞானத்தின் எதிர்கால அபிவிருத்திகளும், தொழில்நுட்ப அபிவிருத்திகளும், கைத்தொழில் சமூக நிலவரங்களும் இந்த வஸ்துக்களின் கூறுகளையும் இவற்றின் குணங்களையும் விரிவாக தெரிந்துகொள்வதில் இருக்கிறது.

### பூமியிலிருந்து சூரியனது தூரம்

ஜெர்மன் வான சாஸ்திரியாகிய ஜி. ரேபி அவர்களது பரிசீலனை தான் சமீப காலத்தது. எரோஸ் என்ற சிறிய உபகிரகத்தின் மண்டலப் பாதையைக் கவனித்ததில் பூமியிலிருந்து சூரியனுக்கு 14,95,26,000 கிலோ மீட்டருக்கும் 14,95,40,000 கிலோ மீட்டருக்கும் [9,29,10,970.26 மைலுக்கும் 9,29,19,669.80 மைலுக்கும்] இடையே இருக்கிறதென்று இவர் நிர்ணயித்தார். வான சாஸ்திரத்திற்கு மட்டுமல்லாமல் சரியான நேரத்தை நிர்ணயிப்பதற்கும் இந்த தூரத்தைப் பற்றிய அறிவு மிகவும் இன்றியமையாததாயிருக்கிறது. இதர அனுபவ ரீதியான கேள்விகளுக்கும் இக்கணக்கு உதவியாக இருந்து வருகிறது.

### இரத்தப் பிரிவுகள்

இரத்தப் பிரிவுகளையும் அம்சங்

(2-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சரித்திரம் தவறு உண்மையா என்பதை ஆராயு முன்னர், "ஆரியராவது—திராவிடராவது—அதெல்லாம் ஒன்றும்கிடையாது—வெறுங் காட்டுக் கூச்சல்"—என்று கூறி, மறுக்கவோ, மறைக்கவோ முடியாத கல் எழுத்துப் போன்ற ஒரு பெரும் உண்மையைமூடி வைத்துத் தங்கள் சுகவாழ்வுக்கு வழிகோலும் பாதைகளையே வகுத்துச் செல்லும் ஆச்சாரியார் போன்றோரின் வாயிலிருந்தே ஆரிய — திராவிடப் பூசல் என்ற சொற்றொடர்கள் வந்ததைக் காண நாம் பெரிதும் மகிழ்கிறோம்—பாராட்டுகிறோம்! ஆச்சாரியார் வாயிலிருந்து இந்தச் சொற்றொடர்கள் வருவதற்குக் காரணமாய் இருந்த கவர்னர் பிரகாசாவுக்கு நன்றி செலுத்துகிறோம்!

"ஆரியர்! திராவிடர்! என்ன இது! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! ஏன் இங்கே ஆரியர்—திராவிடர் என்று பேசப்படுகிறது? இதன் உட்கருத்தென்ன? நண்பரே! இது பற்றிச் சிறிது விளக்கம் தாருங்கள்"

என்று அன்பர் ஆச்சாரியாரைக் கவர்னர் பிரகாசா அவர்கள் கேட்டிருக்கிறார்.

"இதேதடா பெரிய சங்கடமாகப் போய் விட்டதே! நாம் எவ்வளவோ முன் எச்சரிக்கையாக மூடிவைத்த ஒன்றை வெளியுலகுக்குத் தெரியக்கூடாதென்று மறைத்து வைத்த ஒன்றை, ஏனோ இந்த ஆசாமி கிளறி விட்டார்!"

என்ற தாங்க முடியாத மனவேதனையால்—

"என்ன சமாதானம் கூறுவது இதற்கு? கேள்வி கேட்டவரோ கவர்னர்! பதில் சொல்ல வேண்டிய நானோ முதலமைச்சர்! இராமசாமியார் பேசியதைக் கல்யாண சுந்தரனார் மறுப்பதுபோல் இதனை விட்டுவிட முடியுமா? முடியாதே! கேள்வி கேட்டவரோ வடநாட்டவர்! நானோ இப்போது தென்னாட்டில் இருப்பவன் — தென்னாடே என்னுடு என்று கூறி, ஆரிய—திராவிடப் போராட்டத்தைத் தடுக்கவும் மறைக்கவும் வேண்டிய நிலையிலுள்ளவன் — யார் ஒரு உண்மையை மறுக்க வேண்டுமென்று கருதுகிறாரோ, அவரைப் பார்த்தே, அதன்விளக்கம்கூறும்படி கேட்கிறாரே இவர்! எப்படி மறைப்பது—ஏதாவது ஒரு சமாதானம் கூறித்தானே ஆகவேண்டும்—இதோ கூறுகிறேன் பாரும்-இடியப்பச்சிக்கல்போன்ற எத்தனையோ பிரச்னைகளையெல்லாம் என்னுடைய சாமர்த்தியத்தினால் தெளிவுபடுத்தி விட்டதாகச் சிலர் (பலரல்ல) கருதும்படி செய்யக்கூடிய என்னால் இதனையா செய்ய முடியாது! சரித்திரத்தையே தலை கீழாக மாற்றி விடுகிறேன்! இது எங்கள் வழி வழிப் பழக்கமாச்சே! எங்கள் நல்வாழ்விற்கு எதெது தடையாகவும் முட்டுக் கட்டையாகவும் காணப்படுகிறதோ, அவற்றையெல்லாம் அவ்வப்போது களைந்தெறியும்பரம்பரையில் வந்த என்னால், இதனையா செய்ய முடியாது!"

என்று கூறுவதுபோல், கேள்வி கேட்ட கவர்னர் அவர்களுக்கு அன்பர் ஆச்சாரியார் பதில் கூறியிருக்கிறார்.

எந்தக்காலத்திலும்—எந்தக் காரணத்தைக் கொண்டும் எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஒரு உண்மையைமறைக்கும் துணிவு ஆச்சாரியாருக்கும் அவர் போன்றவர்களுக்கும் தான் உண்டாகுமே யொழிய, உண்மையில் நாட்டங் கொண்ட மற்றெவருக்கும் உண்டாகவேஉண்டாகாது.

சரித்திரம் என்றால், அது, காசுக்கு இரண்டென்று கூவிவிற்கப்படும் ஒரு பண்டம் என்று கருதி விட்டார் போலும்! புராண இதிகாசங்களில் காணப்படும் புரட்டுகள், சரித்திரத்திலும் உண்டென்பது அன்பர் ஆச்சாரியாரின் ஆராய்ச்சி போலும்!

இப்படி நாம் கூறுவதால், சரித்திரம் என்று சொல்லியும் எழுதியும் வைக்கப்பட்டுள்ள அனைத்துமே உண்மையென்று நாம் ஒப்புக்கொள்வதாக எவரும் கருதிவிடக்கூடாது. இவை எல்லாம் சரித்திரங்கள் தான் என்று கூறப்படும் பல நிகழ்ச்சிகள் உண்மைக்கு மாறுபட்டவை என்பதை நாம் அறிவோம். நம்முடைய நல் வாழ்வு—சுக வாழ்வு அதாவது சோம்பேறி வாழ்வுக்கு எது வழிகோலுகின்றதோ அது தான் சரித்திரமென்றும், மற்றவை எல்லாம் சரித்திரங்கள் அல்லவென்றுங்கூறும் சிறுமதியுடையோரல்ல நாம்.

சரித்திரம் என்பது புராண இதிகாசங்களைப்போல் ஒரு சிலரின் சுக வாழ்வுக்கு வழிகோலுவதாக அமைந்ததல்ல — அமைக்கப்பட்டதுமல்ல. பண்டைக்காலத்து உண்மைகளை இன்றைய மக்களுக்கு அப்படியே எடுத்துக்காட்டும் ஒரு கண்ணாடி போன்றது தான் சரித்திரம். அவையல்லாத மற்றவை எல்லாம் சரித்திரங்களாகா.

இந்த உண்மையை அன்பர் ஆச்சாரியார் மிகமிக எளிதாக மறைத்து விடப்பார்க்கிறார். ஆரியர்—திராவிடரைப்பற்றி எழுதி வைக்கப்பட்டிருக்கும் சரித்திரங்களையெல்லாம் பொய்யாக்கப் பார்க்கிறார். ஆரியர்—திராவிடரைப்பற்றி எழுதப்பட்ட சரித்திரங்கள் ஒன்றா? இரண்டா? எழுதியவர்கள் ஒருவரா? இருவரா? எத்தனையோ சரித்திரப்பேராசிரியர்கள் ஆரியர்—திராவிடர்களைப்பற்றி அவரவர்களும் ஆராய்ந்து கண்டறிந்த மறுக்கமுடியாத உண்மைகளைச் சரித்திரங்களாக எழுதிவைத்துள்ளனர்.

ஆரியர் யார்? திராவிடர் யார்? விளக்கம் தேவை. யாருக்கு? பெரியவர்களுக்கா? அல்ல, அல்ல! சிறுவர்களுக்கு — பள்ளிமாணவர்களுக்கு அவசியம் தேவை—அவர்கள்தான் மிகமிக அவசியமாகவும் அவசரமாகவும் தெரிந்துகொள்ளவேண்டியவர்கள். எனவே அவர்களுக்கே முதலில் கற்றுக்கொடுக்கவேண்டும் என்று கருதிய பேரறிஞர்கள், அரசாங்கம் மறுக்கமுடியாத ஆராய்ச்சி உண்மைகளை, விளக்கங்களுடனும் மேற்கோள்களுடனும் எடுத்துக் காட்டிப் பள்ளிக்கூடப் பாடபுத்தகங்களில் ஆரியர்—திராவிடரைப் பற்றி எழுதினர்.

சின்னஞ் சிறுவர்கள் முதலில் கற்றுத் தெரிந்துகொள்ள வேண்டியது ஆரியர்—திராவிடர்களைப் பற்றியே என்பதனை நன்கறிந்த சரித்திரப் பேராசிரியர்கள், தாங்கள் எழுதிய பள்ளிக்கூடப் பாடபுத்தகத்தின் முதல் பாடமாக ஆரியர்—திராவிடரைப்பற்றிய உண்மை வரலாறுகளையே அமைத்தனர். சரித்திரம் கற்றுக்கொள்ளும் மாணவன் முதலில் ஆரியர் யார்? திராவிடர் யார்? என்று தெரிந்து கொள்வது மிகமிக அவசியம் என்பது சரித்திர ஆசிரியர்களின் நோக்கமாகும். எனவேதான் மாணவர்களுக்கு என்று ஏற்படுத்திய சரித்திரப் பாட புத்தகத்தின் முதல் பாடமாக ஆரிய—திராவிட விளக்கம் விரிவாக எழுதப்பட்டுள்ளது. இதனை மறைக்கப் பார்க்கிறார் கருப்புக் கண்ணாடியார்.

ஆரியர் — திராவிடர்களைப்பற்றி எழுதப்பட்ட சரித்திரங்களை எல்லாம்,

தவறானவை
மட்டரகமானவை
பொய்யானவை

என்பன போன்ற சொற்களைக் கூறி, ஆரிய திராவிடப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளிபோட முனைகிறார் முதலமைச்சர். ஆரியர்—திராவிடர் என்ற பிரச்னையே தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலாவது இருக்கக் கூடாதென்பதுதான் நம்முடைய விருப்பமுமாகும். ஆனால், இந்தப் "பாழாய்ப்போன" சரித்திர உண்மைகள் நமது விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கின்றனவே!

ஆரியர் வேறு

திராவிடர் வேறு

அவர்களுடைய கலாச்சாரம் வேறு

இவர்களுடைய கலாச்சாரம் வேறு

எல்லாத் துறைகளிலும் ஆரியர்களும் திராவிடர்களும் வெவ்வேறானவர்களே.

அவர்களை எந்தக் காலத்திலும் ஒன்றாக இணைக்கமுடியாது

நடை உடை பாவனை அனைத்திலுமே இரு இனமும் வெவ்வேறான அடிப்படையைக் கொண்டவர்கள்.

என்ற இன்னபிற உண்மைகளைச் சரித்திர ஆசிரியர்கள் தங்கள் ஆராய்ச்சியின் விளைவாக வெளியிட்டுள்ளார்கள். இவற்றை எல்லாம் தம்முடைய பதவி என்னும் போர்வையால் மறைத்துவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறார் மாணிக்கவேலர்களின் குருநாதர். நிலையற்ற அரசியல் சூதாட்டத்தில் அடிக்கடி வெற்றிகண்டு வரும் ஆச்சாரியார், நிலைவேறான சரித்திரத்திலும் சூதாடி வெற்றி காணலாம் என்று கருதுகிறார். வானத்தை வில்லாக வளைப்பேன் — மணலைக் கயிறாகத் திரிப்பேன் என்று மமதையோடு பேசுகிறார்.

"ஆரியர்—திராவிடரைப்பற்றி நல்லவர்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள்."

இது ஆச்சாரியாரின் கண்டுபிடிப்பு. அதே சமயத்தில், ஆரிய—திராவிடப் பூசலைத் தம்மால் புரிந்துகொள்ளமுடியும் என்றும் அதற்குக் காரணம் தாம் ஒரு கெட்டவன்என்றும் கூறித்தமமுடைய கெட்டித்தனத்தைக்காட்டக் குட்டிக்கரணம் போடுகிறார்.

ஆச்சாரியாரின் கூற்றுப்படி, யார் நல்லவர்கள், யார் கெட்டவர்கள் என்பதற்குக்கூட ஒரு ஆராய்ச்சிக் கூடம் நிறுவவேண்டும்போல் தெரிகிறது! ஆச்சாரியாரின் ஆராய்ச்சிப்படி, ஒன்றைப் புரிந்துகொள்பவர்கள் கெட்டவர்களாகவும், புரிந்துகொள்ளமுடியாதவர்கள் நல்லவர்களாகவுமன்றோ ஆகிறார்கள். ஆரிய திராவிடப் பூசலுக்குக் காரணம் என்ன என்பது கவர்னர் பிரகாசவால் புரிந்துகொள்ளமுடியவில்லை—எனவே அவர் நல்லவர். ஆரிய — திராவிடப் பூசலுக்குக் காரணம் என்ன எனபது ஆச்சாரியாரால் புரிந்துகொள்ள முடிகிறது — எனவே இவர் கெட்டவர். எந்த வக்கீலாலும் செய்யமுடியாதவாதத்தைச் சேலத்து வக்கீல் 'செம்மை' யாகச் செய்து காண்பிக்கிறார்.

நல்லவர்!

கெட்டவர்!

ஒன்றைப் புரிந்துகொள்பவர் கெட்டவர்.

ஒன்றைப் புரிந்துகொள்ளமுடியாதவர் நல்லவர்.

ஏன் இப்படியெல்லாம் பேசித் தம்மை ஒரு நல்லவராக்க முயல வேண்டும் நமது அன்பிற்குரிய ஆச்சாரியார் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை அவர் ஒருவர் 'நல்லவர்' என்பதற்கு அவரது கொல்லைப்புற வழியே சான்றாக இருக்கும் போது, ஏன ஆரிய திராவிடப் பூசலுக்குள் நுழைந்து, கெட்டவன் என்று கூறுவதன் வாயிலாகத் தம்மை ஒரு நல்லவனாக்க முயல வேண்டும்!

காக்கை கருப்பு

கொக்கு வெளுப்பு.

இதற்கு ஆராய்ச்சி ஏன்? பிரசங்கம் ஏன்? முயற்கொம்பை கோழிப் பாலில் ஊறவைத்துப் பிறவி ஊமையைப் பேசுவிக்கும் 'அரிய' முயற்சியில் ஆச்சாரியார் ஏன் இறங்கவேண்டும் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

அன்பர் ஆச்சாரியார் பேசிய ஆரிய திராவிடப் பூசலைப்பற்றி எழுதத் தொடங்கிய இக்கட்டுரை நீண்டுகொண்டே போய்விடுமோ என்ற அச்சத்தால் சுருக்கவேண்டியதாகிவிட்டது. எனவே, ஆரியர் வேறு, திராவிடர் வேறு என்பதற்குரிய இரண்டொரு சரித்திர விளக்கங்களைமட்டும் கூறி, இதனை முடித்துக்கொள்கிறேன்.

1. இந்திய பூர்வீகக் குடிகளில் திராவிடர்கள்தான் மிகப் பழைய குடிகள்.

2 வடக்கிலிருந்து வந்து குடியேறிய ஆரியர்களால் கலப்பு ஏற்படாமல் தனிப்பட்ட இனத்தவராய், தென்பீடபூமியில் வசிப்பவர்கள் திராவிடர்கள்.

3. மத்திய ஆசியாவின் மேற்குப் பாகத்தில் வசித்து வந்த ஆரியர்கள் இந்தியாவின் வடமேற்கிலுள்ள கணவாய்களின்மூலம் நம் நாட்டை அடைந்தார்கள்.

4. ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டும், சாமான்களை வண்டியில் ஏற்றிக் கொண்டும் வியாபாரம் செய்பவர்களைப் போலும், குடியேறுபவர்களைப் போலும் தங்கள் குடும்பங்களுடன், ஒரு அலைக்குப்பின் ஒரு அலை மோதுவதுபோல், கூட்டம் கூட்டமாய் இந்தியாவில் வந்து வடமேற்குப் பாகத்தில் குடியேறினார்கள்.

5. ஆரியர்கள் மத்திய ஆசியாவில் வசித்து வந்த அலைந்து திரியும் சாதியார்கள் ஆவர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## திருமணம்

செங்கற்பட்டு மாவட்டத் துணைச் செயலாளர் D. சபாபதி—தேவசேனு வாழ்க்கை ஒப்பந்த விழா 25–5–53 திங்கட்கிழமை காலை 9-மணிக்கு மேல் தோழர் மு. இரத்தினம் அவர்கள் தலைமையில காஞ்சி நெல்லுக்காரத்தெரு ராஜகோபால் திருமண மாளிகையில நடைபெறும்.

## நடைபெற்றவை

லாடனேந்தல்: 12–5–53 தி. மு. க. கிளை தோற்றுவிக்கப்பட்டது. தோழர் எம். ஆர். மூர்த்தி தலைமையில் மதுரை எஸ் முத்து. எஸ் எம். காசிம், ஈட்டி இறைவன் த. சோனையா ஆகியோர் பேசினர்.

கோவை: 17–5–53 தாலமுத்து நடராசன் படிப்பக முதலாவது ஆண்டுவிழா காலை 9 மணிக்கு கோவை ராயல் தியேட்டரில் நடைபெற்றது. தோழர் சி.நா. கதிரொளி தலைமையில் தோழர்கள் சி. பி. சிற்றரசு ஈ.வெ.கி. சம்பத் ஆகியோர் பேசினர்.

திருவிளையாட்டம்: 18—5—53 தி. மு. க. சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் பாப்பையா தலைமையில் என். எஸ். இளங்கோ, தோழியர் பூங்கோதை ஆகியோர் பேசினர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram